**தலைப்பு 282 – நீர்பாசன திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 282– நீர்பாசன திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள், மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுகள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

நீர்பாசன திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா. 16,583.78 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அவற்றில் ரூபா 13,223.11 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 3,360.67 மில்லியன் அல்லது 20.26 சதவீத நிதி ஏற்பாட சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 3,012.35 | 2,869.12 | 143.23 | 4.75 |
| மூலதனம் | 13,571.43 | 10,353.99 | 3,217.44 | 23.71 |
| மொத்தம் | 16,583.78 | 13,223.11 | 3,360.67 | 20.26 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக திணைக்களத்திற்கு ஏனைய 03 அமைச்சுக்கள் மற்றும் 02 திணைக்களங்களால் ரூபா 1,545,60 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்நிதி ஏற்பாடுகளில் ரூபா 1,234.30 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதி ஏற்பாடுகளில் ரூபா 311.30 மில்லியன் அல்லது 20.14 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிடமிருந்து உமா ஓயா அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 1,200.00 மில்லியன் நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 5.58 மில்லியன் மிகையாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 148.00 | 147.80 | 105.00 | 138.39 | 500.00 | 365.90 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 05 வைப்புக் கணக்குகளின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 548.28 மில்லியனாகும் விபரம் கீழே தரப்படுகின்றது.

| **வைப்புக்கணக்கின் இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா மில்லியன்** |
| 6000/0000/00/0001/0022/000 | 12.09 |
| 6000/0000/00/0001/0041/000 | 4.04 |
| 6000/0000/00/0016/0008/000 | 266.61 |
| 6000/0000/00/0018/0010/000 | 1.27 |
| 6000/0000/00/0013/0036/000 | 264.27 |
| மொத்தம் | 548.28 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

நீர்பாசனத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டு கணக்கும் இணக்க கூற்றும் மேலே பந்தி 1.1 இல் காட்டப்பட்டவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாதிருத்தல்

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) |
| (ஆ) | கணனி துணைக்கருவி மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஈ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

## 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

திணைக்களத்தால் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 43 மோட்டார் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் 2017 யூலை 31 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கபட்டிருக்கவில்லை.

## 3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

------------------------------------------------------------------

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பாக 2017 யூலை 31 ஆந் திகதி வரையும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அக்கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பான கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 6.38 மில்லியனாகும்.

## 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

----------------------------------

### பாதீட்டு முரண்

-----------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தேவையான கட்டுநிதி வரம்புகளைக் குறிப்பிட்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சம்ர்ப்பிக்கபட்டிருந்தது. அவ் வரம்புகள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளின் பிரகாரம் அந்த மாதங்களின் எதிர்பாக்கப்பட்டவாறு கட்டுநிதியை திணைக்களத்திற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் விடுவிக்கப்படாததன் காரணமாக 16 செலவு விடயங்களின் கீழ் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்காக வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கிழ் ரேகம் - கிதுல் நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்கான ரூபா 50.00 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 45.00 மில்லியன் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சியிருந்த ரூபா 5.00 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) மதிப்பீட்டைவிட உள்ளபடியான செலவுகள் குறைவடைதல், காடுகளை வெளியாக்குவதற்குத் தாமதித்தல், நிர்மாண நடவடிக்கைகளை அடுத்துவரும் ஆண்டிற்கு காலம் தாழ்த்துதல் ஆகிய காரணங்களைக் காட்டி 2016 ஆம் ஆண்டின் போது 03 விண்ணப்பப் படிவங்களைப் பயன்படுத்தி நிதிப்பிரமாணம் 66 இன் ஒவ்வவொரு செலவு விடயங்களுக்கு இடையே நிதி ஏற்பாடு மாற்றம் செய்யப்பட்டிருந்தன. அந்த நிதி ஏற்பாடுகளிருந்து ரூபா 2,131.85 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.5 பொது வைப்புக் கணக்கு

----------------------------------

02 ஆண்டுகளை மிகைத்து ரூபா 55.52 மில்லியன் கூட்டு மொத்தமான 83 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

28201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 24,174,162 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதி 01 ஆண்டிலிருந்து 25 ஆண்டுகள் வரையான காலவிச்சில் காணப்பட்டு வருகின்ற போதிலும் அந்த நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டு மொத்தம் ரூபா 365,904,846 ஆக இருந்ததுடன் திணைக்கள கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா 365,833,685 ஆக ரூபா 71,161 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டது.

(இ) அங்கத்தவர் கடன் பதிவேடுகளில் காட்டப்படுகின்ற தனித்தனி மீதிகளின் பெறுமதிக்கும் முற்பணக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட தனித்தனி மீதிகளின் பெறுமதிக்குமிடையே ரூபா 782,729 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**3.7 நல்லாட்சியும் கணக்களி தன்மையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

தலைமை அலுவலகத்தையும் 14 வலய அலுவலகங்களையும் மற்றும் 6,159 நிரந்தர பதவியணியினர்களையும் உள்ளடக்கிய நீர்பாசனத் திணைக்களத்தின் செயற்பாடுகளை கணக்காய்வு செய்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு 19 பதவியணியினர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் உள்ளபடியான பதவியணியினர் 11 ஆகும். அதற்கிணங்க உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவியணியினர் போதியதாக இல்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் பயிற்சிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நீர்பாசனத் திணைக்களத்தின் இரத்மலானை உத்தியோக பூர்வ இல்ல திட்டத்தைச் சார்ந்த உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்ட 23 இல்லங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

(ii) 2014 யூன் 10 ஆந் திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை திணைக்களத்தின் ஒரு இலிகிதர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தார். எதுவித விசாரணையும் நடாத்தப்படாது

அத்திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை 02 ஆண்டுகள் மற்றும் 07 மாதங்கள் காலத்திற்காக சம்பளமாக ரூபா 1,300,566 பணம் விளைவற்று செலுத்தப்பட்டிருந்தது. அவரின் ஒழுக்காற்று நடவடிக்கை முடிவடைவதற்கு முன்னர் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 14:12 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 149,158 தொகையான நிலுவைச் சம்பள ஏற்றமும் வழங்கப்பட்டிருந்தது.

(iii) வீரகெடிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்திலுள்ள இருப்பேட்டின் பிரகாரம் 1991 ஆம் ஆண்டிலிருந்து 2015 செப்தெம்பர் மாதம் வரை களஞ்சியத்திற்கு கிடைத்த 28 பொருட்கள் வழங்கப்படாது விளைளவற்றுக் காணப்பட்டது.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு அந்த அறிக்கை 2017 யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 02 நீர்பாசன அலுவலகங்களின் அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் சம்பந்தமாகவும் ஏனைய அவதானிப்புக்கள் சம்பந்தமாகவும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------

வெளி நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற 40 நபர்களும் திணைக்களத்திலிருந்து ஓய்வுபெற்ற 04 நபர்களும் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறான 30 உத்தியோகபூர்வ இல்லங்களை மீளப்பெறுவதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஏனைய நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 131 வாகனங்களை திணைக்களத்தினால் முறையாகப் பொறுப்பேற்பதற்கு 2017 யூலை 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்

------------------------------------------------------------

திணைக்களத்தினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 2,311.91 மில்லியனாக இருந்ததுடன் அப்பெறுமதி ஒரு ஆண்டிற்கு குறைந்த காலப்பகுதிக்குரியவையாக இருந்ததுடன் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 94 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பொறுப்புக்களும் செலவு செய்யப்பட்ட அளவும் அந்த ஆண்டின் நிதி ஏற்பாட்டை மிகைத்தலாகாது என்ற போதிலும் தேறிய நிதி ஏற்பாட்டு எல்லையை மிகைத்து ரூபா 57.25 மில்லியன் தொகையான பொறுப்புக்களை திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

(ii) ரூபா 21.23 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) யான் ஓயா செயற்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,244.72 மில்லியன் பொறுப்புக்களில் 86 சதவீதம் அல்லது ரூபா 1,989.08 மில்லியன் பணம் ஒரு வெளிநாட்டுக் கம்பனிக்கு செலுத்தவேண்டியிருந்தது. அச்செலவு விடயத்தின் கீழ் ரூபா 2,013.84 மில்லியன் தேறிய சேமிப்பு காணப்பட்டிருந்தும் பொறுப்பைச் செலுத்தி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 447(4) இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து செலவுகளும் செலவு பேரேட்டில் காட்டப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் இணங்கியிருந்த அனைத்து பொறுப்புக்களுக்குமுரிய செலவு விபரம் செலவுப் பேரேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 இணக்கமின்மைகள்**

---------------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

----------------------------------------------------------------------------------------------------------------------------தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| -------------------------------------------- | | ----------- | --------------------------- |
| | | ரூபா | |
| (அ) | பாராளுமன்ற அதிகாரச்சட்டம்<br>------------------------ | - | |
| | 1982 இன் 12 ஆம் இலக்க பொது ஆதன விடயங்களினுடாக இடம் பெறுகின்ற தவறுகள் தொடர்பான அதிகாரச் சட்டம் | | பொலன்னறுவை நீர்பாசன வலயத்திற்குரிய கிரிதலை சுற்றுலா விடுதியை நீர்பாசன மற்றும் நிர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் அவரின் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக 2015 ஒக்தோபர் 02 ஆந் திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை எதுவித கொடுப்பனவுமின்றி பயன்படுத்தியிருந்தார். |
| (ஆ) | அமைச்சரவைப் பத்திரம்<br>------------------------- | | |
| | 2013 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 13/1166/508/017 ஆம் இலக்க | | ஒப்பந்த அடிப்படையின் கீழ் நீண்ட காலமாகச் சேவையாற்றிய 169 உத்தியோகத்தர்கள் கொத்மலை மற்றும் கலகமுவ பயிற்சி |

| | | |
|---|---|---|
| | அமைச்சரவைப் பத்திரம் | நிறுவனங்களில் NVQ 5 மட்டத்தில் ஒரு பயிற்சி நெறியை பூர்த்தி செய்திருந்தனர். உரிய சான்றிதழை பெற்றுக்கொண்டதன் பின்னர் அச்சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படுகின்ற வகையில் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கு 2013 ஒக்தோபர் 11 ஆந் திகதி 13/1166/508/017 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் கட்டளையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 யூலை 31 ஆந் திகதி வரையும் அக்கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>------------------------------- | |
| | (i) V ஆவது அத்தியாயத்தின் 7:1 ஆம் பிரிவு | விடுமுறை பெற்றுக் கொள்ளாமல் தெரியப்படுத்தப்படாது ஒரு கணக்காளர் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது 192 நாட்கள் கடமைக்கு சமூகமளிக்காதிருந்தும் தாபனவிதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று நடைமுறைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 7 மற்றும் 9 ஆம் பிவிவுகள் | திணைக்களத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் அவர்கள் மரணமடைந்த அல்லது ஒய்வு பெற்ற பின்னர் மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஒய்வு பெறும் போது, இடமாற்றம் பெற்று செல்லும் போது மற்றும் மரணமடைந்த பின்னர் திணைக்களத்திற்கு உத்தியோகபூர்வ இல்லங்களை விரைவாக மீளப்பெற்றுக்கொள்ளும் செயற்திறனான வேலைத்திட்டம் திணைக்களத்திடம் காணப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (iii) XIX ஆவது அத்தியாயத்தின் 4:2:1 ஆம் பிரிவு | - | உத்தியோகத்தர் /ஊழியர் மாத்திரம் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற 12 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அந்த உத்தியோபூர்வ இல்லங்களில் குடியிருந்த தனி நபர்களை திருமணமாகாதோர் இல்லங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு அல்லது தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 4:2:1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட புள்ளி வழங்கும் அடிப்படையில் உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்கு திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சேசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்<br>--------------------------------- | | |
| | (i) நிதிப்பிரமாணம் 207(1) | 443,619 | ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவிலும் அந்த ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை செலவு செய்யும் அதிகாரம் காலாவதியாகியும் அதற்கு முரணாக 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டிலிருந்து 2017 ஆம் ஆண்டில் 11 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்தது. |
| | (ii) நிதிப்பிரமாணம் 207(3) | 305,541 | செலவு விடயங்களுக்காக வருடாந்த செலவு மதிப்பீட்டிலிருந்து வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை அவை ஒதுக்கீடு செய்யப்பட்ட குறித்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்த வேண்டும் எவ்வாறாயினும் 07 சந்தர்ப்பங்களின் போது நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட குறிக்கோள்களுக்கு முரணாக பணம் செலவு செய்யப்பட்டிருந்தன. |
| | (iii) நிதிப்பிரமாணம் 445 | - | வலய நீர்பாசன பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் பிராந்திய நீர்பாசன பொறியியலாளர் அலுவலகங்களில் பேணப்படவேண்டிய கோவைகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாகவும் சரியாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. அப்பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை சரி செய்வதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பெறுகை வழிகாட்டிக் கோவை – 2006 | | |
| (i) | வழிகாட்டி 5:4:1 | 1,292,336 | பெறுமதி சேர் வரிகளை செலுத்தும் போது பெறுமதி சேர் வரிப் பட்டியல் ஒன்றைப் பெற்றுக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் பட்டியல் இல்லாது 6 வவுச்சர்களின் மூலம் பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | வழிகாட்டி 5:4:12 | 4,310,624 | பெறுமதி சேர் வரிக்கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் 2014 இலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

3.10 உள்நாட்டு நிதிகளின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

பெதியாகொட நீர்பம்பி நிலையம் மற்றும் எல்லேவெவ நீர்த்தேக்கத்தையும் நிர்மாணிப்பதற்காக முன்னைய ஆண்டில் முறையே ரூபா 50,000,000 மற்றும் ரூபா 30,000,000 தொகைகளும் மீளாய்வாண்டின் போது ரூபா 50,000,000 படியாகவும் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அந்நிர்மாணங்கள் மீளாய்வாண்டின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.11 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 வலய நீர்பாசன பணிப்பாளர் அலுவலகங்களால் பேணப்பட்ட 04 வங்கி கணக்குகள் 2007 செப்தெம்பர் 04 ஆந் திகதி, 2013 திசெம்பர் 31 ஆந் திகதி, 2014 சனவரி 31 ஆந் திகதி மற்றும் 2016 திசெம்பர் 30 ஆந் திகதிகளிலிருந்து செயற்பாடற்று இருந்தன.

(ஆ) 11 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 160,788 கூட்டுமொத்தமான 18 காசோலைகள் வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்திருந்தும் அது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,195,180 கூட்டுமொத்தமான இனங்காணப்பட்ட 29 ''வரவு'' மீதிகளையும் ரூபா 170,065 கூட்டுமொத்தமான இனங்காணப்படாத 07 ''செலவு'' மீதிகளையும் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தன.

3.12 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

---

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சச்சரவுத் தன்மை வாய்ந்தவையாகும். தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

(அ) நீர் வலுப் பிரிவில் சேவையாற்றி 2002 மே 09 ஆந் திகதி கட்டாய ஓய்வு பெற்ற களஞ்சிய பொறுப்பாளரின் 2002 ஆம் ஆண்டிற்கு முன்னைய சேவைக்காலத்தின் போது இடம்பெற்ற நில அளவை உபகரணப் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 4,313,239 ஆக அறிவிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகத் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 411,051 பணம் மாத்திரம் அவரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் 2017 யூலை 31 ஆந் திகதி வரை முடியாதிருந்தது. 14 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றிருந்த இப்பற்றாக்குறையை அறவிடுவதற்காக முறையான பின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பொறியியலாளரின் தகமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் இடம்பெற்றிருக்காததுடன் பட்டயப் பொறியியலாளர் என வெளிப்படுத்தியிருந்தும் அவ்வாறு இல்லை என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. இதற்கிணங்க ஆட்சேர்க்கும் போதும் பதவியுயர்வுகள் வழங்கும் போதும் தகமைகள் உறுதிப்படுத்திக் கொள்ளப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

3.13 நட்டங்களும் சேதங்களும்

---

85 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 3,865,424 தொகையான நட்டங்களும் சேதங்களும் ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 7,682,799 தொகையான நட்டங்களையும் சேதங்களையும் அறவீடு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 19 ஆண்டுகளிலிருந்து 36 ஆண்டுகள் வரையான காலம் எடுத்திருந்த ரூபா 481,291 தொகையான 02 பண மோசடிகள் 2017 யூலை மாதம் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3.14 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

---

திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடங்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட முறைமையீனங்கள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக திணைக்களத்தால் சரி செய்திருக்காத பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு பந்திகளுக்கான தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயங்கள் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இல | |
| 2006 | 3.1 (அ) | சுகலாதேவி குளம் செயற்திட்டத்தின் கீழ் பொறியியல் உதவியாளரினால் மேற்கொண்ட ஒழுங்கீனங்கள் |
| 2006 | 3.1 (ஆ) | வெலிஓயா செயற்திட்டத்தின் கீழ் இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் |
| 2006 | 2.4.1 | போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆதனக் கடன் பெற்றுக்கொள்ளல். |
| 2006 | 7.2 (அ) | வெஹெரகல செயற்திட்டத்திற்காக கொங்கிரீட் கலவை இயந்திரம் பெற்றுக்கொள்ளல். |
| 2008 | 7 (இ) (1) | ஒரு வாகனம் விபத்துக்குள்ளாகியதன் காரணமாக ரூபா 210,000 நட்டம் ஏற்பட்டமை. |
| 2011 | 2.8 | சுற்றுலா படகு சேவையை நடத்துதல். |
| 2015 | 3.12 | 25/2014 ஆம் இலக்கம் பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு முரணாக நடவடிக்கை எடுத்தல். |
| | 3.13 | நிரந்தர நியமனங்களை வழங்குவதற்காக பிழையான ஆவணங்களைத் தயாரித்தல். |

## 3.15 முகாமைத்துவ பலவீனம்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம் மற்றும் காலத்துக்குக் காலம் அதற்கு செய்யப்பட்ட திருத்தங்களை நிகழ்காலத்திற்குப் பொருந்தும் வகையில் திருத்திக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரத்மலான வீடமைப்புத் தொகுதியில் 06 ஊழியர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 06 உத்தியோக பூர்வ இல்லங்கள் அதிகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் வெளித்தரப்பினர் வசித்து வருகின்றார்கள் என்ற தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்ட நிர்மாணத்திற்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 545 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அதற்கான சாத்திய வள ஆய்வும் சுற்றாடல் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புத்தளம் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தால் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியானது தவறாக கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 30,648 பணம் ஒப்பந்தகாரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) வீரகெடிய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களுடன் 07 சந்தர்ப்பங்களின் போது உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு நீண்ட காலம் எடுத்திருந்தும் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நீர்பாசனத் திணைக்களத்தின் 25 உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை அமுல்படுத்தப்பட்டிருந்தும் அவ்விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது.

**3.16 மனித வளங்கள் முகாமைத்துவம்**

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 433 | 300 | 133 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 180 | 24 | 156 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 2,752 | 1,948 | 804 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 2,774 | 3,887 | - | 1,113 |
| | | 6,139 | 6,159 | 1,093 | 1,113 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்ற.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 1,093 ஆக இருந்தது. 2016 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தும் அச்சேமிப்பு தொடர்பாக பதவியணியினர் வெற்றிடமாக இருந்தமை தாக்கமளித்திருக்கவில்லை. அதற்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) ஆரம்ப மட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களை மிகைத்து 1,113 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள்.